# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, விதுரர்கள் அத்துடன் அநாதைகள் ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்

---

*(1998, திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 3.50

# 1998 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, விதுரர்கள் அத்துடன் அநாதைகள் ஓய்வூதியம் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 58/94

## 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விதுரர்கள் அத்துடன் அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, விதுரர்கள் அத்துடன் அநாதைகள் ஓய்வூதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தில் 28அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள் அத்துடன் அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு, இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"குறித்த சில விடயங்களில் எல்லா உதவு தொகைகளையும் மீளளித்தல்.

28அ. (1) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எந்தத் தேதியன்று இப்பிரிவு நடைமுறைக்கு வருகின்றதோ அந்தத் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஒரு விதவையாக விருக்கின்ற எந்த எந்த உதவுதொகை செலுத்துந ரொருவர் பிள்ளைகளின்றி —

(அ) ஓய்வூதியத்தின்மீது பகிரங்க சேவையினின்று இளைப்பாறுகின்றாரோ ;

(ஆ) பதவி துறப்புவாயிலாக அல்லது வேறுவகையாக பகிரங்க சேவையை விட்டு விலகுகின்றாரோ ; அல்லது

(இ) பகிரங்க சேவையிலிருந்து இறக்கின்றாரோ,

விடயத்துக்கேற்றாற்போன்று, அத்தகைய உதவு தொகை செலுத்துநர் அல்லது அத்தகைய உதவு தொகை செலுத்துநரின் சட்டரீதியான பிரதிநிதி, அத்தகை உதவு தொகை செலுத்துநரின் எல்லா உதவு தொகைகளையும் அதன்மீது ஆண்டொன்றுக்கு இரண்டரை நூற்றுவீதக் கூட்டுவட்டியுடன் சேர்த்து மீளளிப்பொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், எந்த உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஐம்பத்தைந்து வயதை எய்துமுன்பு, பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளாரோ அல்லது அதனை விட்டு விலகியுள்ளாரோ அந்த உதவுதொகை செலுத்துநரொருவர் அவர் அத்தகைய வயதை எய்தும்வரை அத்தகைய மீளளிப்புக்கு உரித்துடையவராதலாகாது.

(2) இப்பிரிவின்கீழ், எந்த உதவுதொகை செலுத்துநர், மீளளிப்பொன்றைப் பெற்றுக்கொள்கின்றாரோ, அந்த உதவுதொகை செலுத்துநர் எவரும், நிதியத்தின்மீது மேலதிகக் கோரிக்கை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எந்தத் தேதியன்று இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்றதோ, அந்தத் தேதிக்கு முன்பு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த உதவுதொகை செலுத்துநர், உதவுதொகை எதனதும் மீளளிப்பொன்றைப் பெற்றுள்ளாரோ, அந்த உதவுதொகை செலுத்துநர் எவரும், அதன்மீது இரண்டரை நூற்றுவீதக் கூட்டுவட்டியுடன் சேர்த்து, சொல்லப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குள்ளாக, அத்தகைய மீளளிப்பைத் திருப்பிக் கொடுத்தால் மாத்திரமே, இப்பிரிவின் நன்மையைக் கோரலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே